**O.S.No.418/2025** **தேதி – 06.08.2026**

**வா.சா.1.– குருவையா**

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன்எ ன்றால் சரிதான். நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தான் கிரைய பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு 4 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியது செல்லாது என பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்திற்கு முன்னரே பத்திரங்களின் ஜெராக்ஸ் வாங்கினோ என்றால் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கிரைய பத்திரத்தில் என்னை தரப்பினராக காட்டவில்லை என்றால் 1ம் பிரதிவாதிதான் அடித்து கொண்டு வந்தார். எனக்கு அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் ரூபாய் 20 லட்சம் கொடுத்ததற்கு சாட்சிகள் இல்லை என்றால் பத்திரத்தில் இருக்காது, ஆனால் சாட்சிகள் இருந்தார்கள். ரூபாய் 20 லட்சம் கொடுத்ததற்கு யார் கொடுத்தார்கள், யார் வாங்கினார்கள் என்று வாசகங்கள் இல்லை என்றால் அவர்கள்தான் அடித்து கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த மூன்று நபர்கள்தான் ரூபாய் வாங்கினார்கள். நான் வா.சா.ஆ.3 அக்கிரமெண்ட் போட்ட தேதியில் எந்த அட்வான்ஸ் பணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஒப்பந்தத்திற்கு முன்பாக ரூ.5,10,000/– கொடுத்ததாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். ரூபாய் 5,10,000/– கொடுக்கும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்று ஒப்பந்தத்தில் இல்லாமல் இருக்கும், ஆனால் சாட்சிகளை வைத்துதான் கொடுத்தேன். நான் கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லப்படும் சொத்து 3 ம் பிரதிவாதி ஆனந்திக்கு மட்டும்

பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆனால் ஒப்பந்தத்தில் ஆனந்தி அக்கா உமா, ஆனந்தி அண்ணன் சிவமுத்து ஆகியோர்களை சேர்த்து ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 பத்திரங்கிளில் மொத்தம் 3 சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் வழக்கு சம்பந்தமாக 2 சொத்துதான். நான் போட்ட வா.சா.ஆ.3 அக்கிரமெண்டல் 1 ஏக்கர் 40 செண்டுக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி லலிதா வாங்கிய கிரைய பத்திரமான வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, குன்னூர் கிராம சொத்தும், சிவகாசி தாலுகா, ஈஞ்சார் கிராமத்தில் உள்ள 7 செண்டும் அடங்கும் என்றால் சரிதான். நான் 4ம் பிரதிவாதி கிரைய பத்திரத்தை ரத்து செய்ய சட்டப்படி கேட்க முடியாது என்றும், அதில் 3 சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு 4ம்பிரதிவாதி கிரையம் செல்லாது என்று கேட்காமல், விருதுநகர் மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் செல்லாது என்று கேட்டது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இரு வழக்குரையிலும் 1000 ரூபாய் 4ம் பிரதிவாதி லலிதா என்னிடம் அட்வான்ஸ் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் சாட்சிகள் உள்ளனர். மேற்படி சாட்சிகள் பற்றி எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூபாய் 2 லட்சம் செலவு செய்து கிரைய ஒப்பந்த சொத்தை நான் சீர் செய்தேன் என்பதற்கு கணக்கு வழக்குகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1 முதல் 3 பிரிவாதிகளான சிவமுத்து, ஆனந்தி, உமா ஆகியோர்களிடம் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றும், மேற்படி ஒப்பந்தம் போர்சரியாக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதுபோல் ரூபாய் வா.சா.ஆ.3 ஒப்பந்ததிற்கு முன்பு 5,10,000/- முன்பணமாக கொடுத்தேன் என்றும், ஒப்பந்தத்திற்கு பிறகு 12.05.2022ல் ரூபாய் 20 லட்சம் கொடுத்தேன் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த

வழக்கு போடுவதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வழக்கறிஞர் அனுப்பியிருப்பார். அதுபற்றி எனக்கு தெரியாது. 13.05.2022 ல் 4 ம் பிரதிவாதி பிராது சொத்தையும், அதனுடன் சேர்ந்த சொத்தையும் கிரைய வாங்கிவிட்டார், நான் வழக்கிற்காக 12.05.2022 ல் பிராது சொத்தை JCB மூலம் சுத்தம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி 13.05.2022 லிருந்து பிராது சொத்தை அனுபவித்தில் இருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. யாரும் போகக்கூடாது என்று காவல்நிலையத்தில் எழுதி வாங்கியுள்ளார்கள் என்பதை போலிசை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். நான் மல்லி காவல் நிலையத்தில் கொடுத்த 2 புகார்களும் உண்மையில்லை என்பதால் அதன் மீது காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி லலிதா என்பவர் சரியாக உரிய பணம் கொடுத்துதான் பிராது சொத்தை கிரையம் வாங்கியுள்ளது என்றும், அவர் நல்லெண்ண கிரையதாரர் என்பதால் மேற்படி கிரையத்தை நான் கேள்கி கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு இரண்டு வழக்குகளிலும் பிராதின் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.